RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s732

OPEN ACCESS

# "செம்மீன்" நாவலில் மீனவர்களின் வாழ்வியல்

பா. நாகேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்- 626203, தமிழ்நாடு, இந்தியா.

# The Life of the Fishermen in the Novel 'Semmeen'

P. Nageswari [a, *]

[a] Department of Tamil, Sri S Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: nagesarumugathai@gmail.com

Received: 09-12-2021
Revised: 28-04-2022
Accepted: 08-05-2022
Published: 29-07-2022

Check for updates

**ABSTRACT**

The novel "Cemmin" is a biography of the coastal people of Kerala. During the Sangam period the people of the weaving land were considered to belong to the fishing community. From that time to the present day, the fishing families living along the coast have changed their way of life despite the change of time. Cemmin is a novel written in the nineteenth century. These included small reddish slums along the Kerala coast at the time. The mothers lived with the sea as their mother. Women lived in such a way that if they failed in their morals, their husbands' lives would be in danger. Their business is based on fishing, retailer and wholesaler. The leader of the mothers is referred to as Arriyan. All events take place in His presence. This article sets out to illustrate the living conditions of mothers in this way.

**Keywords:** Cemmin, Coastal People, Arriyan, Weaving Land

## முன்னுரை

"செம்மீன்" நாவலானது கேரளக் கடற்கரை பகுதியைச் சேர்ந்த செம்படவச் சேரி மக்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுவதாகும். செம்மீன் நாவலானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நாவலாகும். இவற்றில் அக்கால கேரளக் கடற்கரையை ஒட்டி சிறுசிறு செம்படவச் சேரிகள் இருந்தன. அம்மக்கள் கடலன்னையைத் தங்களது தாயாக எண்ணி வாழ்ந்தனர். பெண்கள் தங்களது ஒழுக்க நிலையில் இருந்து தவறினால் கணவனின் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிடும் என்ற நிலையில் தவறு ஏதும் நிகழாவண்ணம் வாழ்ந்தனர். இவர்களின் தொழில் மீன் பிடித்தல், சில்லறை வியாபாரி, மொத்த வியாபாரி போன்ற அடிப்படையில் அமைந்தது. அரயனின் முன்னிலையிலே அனைத்து நிகழ்வுகளும் நடப்பதாகவும் உள்ளது. இவ்வாறான முறையில் அம்மக்களின் வாழ்க்கை நிலையினை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## மீனவர்களின் வாழ்வியல்

சங்ககால மக்களின் வாழ்வியலை ஐந்து நிலங்களின் அடிப்படையில் பாகுபடுத்தி உள்ளனர். அந்நிலங்களில் கடற்கரையைச் சார்ந்த பகுதியை நெய்தல் திணை என அழைக்கப்பட்டது. நெய்தல் திணையில் வாழந்த மக்கள் கடற்கரைக் குப்பங்களிலும், பாக்கங்களிலும் வாழ்ந்தனர். கடல் பகுதியைச் சேர்ந்த நெய்தல் நில மக்களின் தொழில்கள், உணவுகள் அனைத்தும் மீனைச் சார்ந்தே இருந்தன. கட்டு மரங்களிலும், படகுகளிலும் சென்று மீனைப் பிடித்துப் பிற ஊர்களுக்கு விற்றும் அவற்றின் மூலம்

பண்டமாற்று முறையில் தானியங்களைப் பெற்றும் வாழ்ந்தனர். அக்காலத்தில் கடற்கரை பகுதியே அதிக வணிகத் தொடர்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. கடற்கரைப் பகுதிகளில் துறைமுகங்கள் நிறுவப்பட்டு வணிகத் தொடர்புக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தது. இதனை பட்டினப்பாலையில், காவிரிப்பூம்பட்டின நகரமைப்பினை கூறுகையில் துறைமுகத்தின் தன்மையினையும், வியாபாரங்கள் நடைபெற்ற விதத்தையும் விளக்குகிறது. மேலும் வணிகம் காரணமாக வெளிநாட்டு யவனர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த இடத்தை "யவன இருக்கை" என்று சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்"

என்ற பாடல்வரிகளின் மூலமாகக் கடற்கரை பகுதிகளே பெரிதும் பண்டமாற்றத்திற்குப் பயனுள்ள பகுதியாக அமைந்துள்ளது (Chidambaranar Samy, 2008). கடற்கரையின் வழியாகப் புரவி, பொன், மணி, ஆரம், அகில், முத்து, துகில் எனப் பலவகையான பொருட்கள் பண்டமாற்றம் செய்யப்பட்டதைப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகிறது. கடற்கரையை ஒட்டிய நிலப்பகுதியை ஒரு சமுதாயமாக அன்றைய காலத்தில் கருதியுள்ளனர்.

சமூக மாற்றத்தில் மீனவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. செம்மீன் நாவல் கேரளத்துக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த செம்படவர் சேரிகளில் வாழும் சமூக வாழ்க்கை முறை, தொழில்கள், பழக்கவழக்கங்கள், பெண்களுக்கான சமுதாய நிலை போன்ற அம்மக்கள் படும் துன்பங்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

## சமூக வாழ்க்கை நிலை

மீனவர் சமூகத்தினரின் வாழ்க்கை நிலையானது வேறுபட்ட தன்மையை கொண்டதாகும். கேரளக்கடற்கரைப் பகுதியில் செம்படவர் இனத்தை சேர்ந்தவர் வாழ்ந்தனர். அம்மக்கள் தங்களின் முதல் அன்னையாகக் கடலையே கருதினர். செம்மீன் நாவலில் செம்பன் குஞ்சு என்பவரின் குடும்பத்தை மையமாக வைத்தே நாவல் செல்வதாக உள்ளது. செம்பன் குஞ்சுவின் மனைவியான சக்கி ஒருமுறை தனது மகளுக்கு அறிவுரை கூறும் நிலையில் இவ்வாறு கூறுகிறாள்.

"கடல் தாய்க்கு கோபம் வந்திடுத்தினா எல்லாத்தையும் அளுச்சிப் போடுவா அப்படி இல்லைன்னா தன் குழந்தைகளுக்கு வாரி வாரிக் கொடுப்பா" (Thakazhi Sivasankara Pillai, 1962).

இதுவே அம்மக்களின் உயிர்நாடியாக இருந்தது. முஸ்லீம்களாக உள்ள முதலாளிமார்களின் குழந்தைகளும் மீனவக் குழந்தைகளும் சிறுவயதிலிருந்தே நண்பர்களாக இருக்கின்றனர். உரிய பருவத்தில் பெண் பிள்ளைகளை அவர்களுடன் பேசுவதற்குத் தடை செய்கின்றனர். தவறான நிலைக்கு எடுத்துச்சென்றுவிடும் என்பதால் ஒழுக்கம்தான் ஒரு பெண்ணுக்கு முக்கியமான சொத்தாகக் கருதப்படுகிறது. அவ்வொழுக்கத்தில் இருந்து பிளவுப்பட்டு நடந்தால் கடலன்னை தண்டிப்பதாகவும், கடலுக்குச் சென்ற ஆடவர்களின் உயிர்க்குத் தீங்கு ஏற்பட்டுவிடும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். மீனவர் சம்சாரிகளை "மரக்கான் மரக்காத்தி" போன்ற பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றனர். கடற்கரையில் வாழும் மீனவர்களுக்குப் பெரும் சொத்தாகவும் தங்களின் சேமிப்பு என்று எண்ணுவது தோணியும் வலையும் இவ்விரண்டையும் வாங்குவதையே தங்களின் வாழ்நாள் குறிக்கோளாக எண்ணுகின்றனர். நாவலில் செம்பன் குஞ்சு தோணி வலை வாங்குவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு திருமண வயதில் இருக்கும் பெண்ணைகூட திருமணம் செய்து கொடுக்காமல் இருக்கும் நிலையை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

ஒவ்வொரு இனச் சமுதாயத்திற்குத் தலைவன் இருப்பதைப் போன்று மீனவக் குழுமத்தின் தலைவரை "அரயன்" என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். அவருக்குத் தனி மரியாதை சிறப்புகள் செய்கின்றனர். துறை அரயனின் பேச்சை மீறி நடப்பவர்கள் இல்லை. வீட்டில் நல்ல நிகழ்வுகள் நடந்தால் துறை அரயனே முன்னிலையில் இருந்து நடத்திக் கொடுப்பார். மீனவர்கள் வாழ்க்கையில் சில காலமே செழிப்பானதாக அமையும். அப்பருவத்தில் அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் சேகரித்து வைத்துக் கொண்டால் மட்டும்தான் பின்னாளில் வறுமை ஏற்படும் போது அதனை பயன்படுத்திக் கொள்ளமுடியும். அவ்வாறில்லையெனில் சில மாதங்களுக்கு அவர்களது குடும்பம் உணவுக்கு வழியில்லாமல் பட்டினியாக இருக்க நேரிடும். இவ்வாறாகச் செம்படவ மீனவர்களின் சமூகநிலை நாவலில் காட்டப்படுகிறது.

## தொழில்கள்

மீனவர் குடும்பத்தில் சொந்தமாகப் படகு வைத்திருப்போர், கூலி வேலை செய்பவர், உள்நாட்டிற்குள்ளே ஒரே இனத்தில் அடித்தட்டில் இருப்பவர்கள் பல்வேறு நிலையான மக்கள் உள்ளனர். அவ்விடத்தில் பெரும்பான்மையான வியாபாரிகள் முஸ்லீம்களாகவே இருந்துள்ளனர். இவர்கள் மீன்களை வாங்கிப் பதப்படுத்தி நகரங்களிலும், துறைமுகங்களிலும் மொத்த வியாபாரிகளிடம் விற்பவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இம்மக்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப பலவிதமான தொழில் அடிப்படையில் பாகுபடுத்திக் காட்டப்படுகின்றனர். இம்மீனவர்களில் அரயன், வலைஞன், முக்குவன், மரக்கான் போன்ற இனப்பிரிவுகள் இருந்துள்ளன. இவற்றில் வலைஞர்களுக்கே சொந்தமான தோணியும் வலையும் வாங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது. நாவலில் செம்படவ இனத்தைச் சேர்ந்த செம்பன் குஞ்சு சொந்தமாகத் தோணியும் வலையும் வாங்குவதகாகக் கூறப்படுகிறது. சொந்தமாகத் தோணி வலை வைத்திருப்பவர்களே முதலாளி என்ற உரிமையாளர்களாக மதிக்கப்படுகின்றனர். தோணி வைத்திருப்பவர்களிடம் வேலையாட்களாக வேலை செய்தல், மீன்பிடித்து வருவதை மொத்த வியாபாரியிடம் மொத்தமாக விலைக்குக் கொடுத்தல் இதனை தோணியின் உரிமையாளரே முடிவு செய்வார். செம்பன் குஞ்சு முதன்முதலில் தோணி வாங்கியவுடன் மீன்பிடித்து வருகையில் அதிகமான மீன்கள் கிடைத்திருந்தன. அதனை

"கையிலே ரொக்கம் இருக்குதா, ரொக்கம்? எனக்குக் காசு வேணும்" (Thakazhi Sivasankara Pillai, 1962).

பழகியவர்கள் என்று பாராத வண்ணம் மொரட்டுத் தனமாக நடந்து கொள்கிறான். மீனவர்களில் சில்லறை வியாபாரிகள் கடலுக்குச் சென்று தோணி வந்தவுடன் தங்களுக்கு வேண்டிய மீனை விலை கொடுத்தும் கையில் இருப்பதைக்கொண்டு சொல்லி வாங்கி அதனை விற்பனைக்கு எடுத்துச் செல்வர். கூடையில் மீனை வாங்கிக் கொண்டு விறுவிறு என்று வேகமாகச் சென்று மீனை விற்று வருவர். விற்க முடியாதவையாக உள்ள சிறிய மீன்களை காயவைத்துக் கருவாடாக உளர்த்தியும், சில நேரங்களில் விற்பனைக்குக் கடற்கரையிலிருந்து மீன் வாங்கி உப்பு போட்டுப் பக்குவம் செய்து காய போட்டால் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிற போது கருவாடு நல்ல விலைக்குப் போகும். அந்நேரங்களில் வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கிச் செல்வர். சங்க காலத்திலும் மீன் பிடிப்பிற்குச் சென்ற மீனவர்கள் மீனை தொகுத்துப் பிரித்துக் கொடுப்பர்.

"உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்

மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்

கல்லென் சேரிப் புலவற் புன்னை"

என்ற நற்றிணை பாடலில் பரத மக்கள் வலை வீசிக் கடலில் மீன் பிடிக்கும் செய்தியை விளக்குகிறது (Subramanian, 2007). மேலும் எஞ்சியிருக்கும் மீன்களை மணல் குவியலில் காயப்போடுகின்றனர். அதனால் ஊர் முழுதும் புலால் நாற்றம் வீசுவதாகச் சுட்டப்படுகிறது. மணற்பரப்பில் மீன்களை வெயிலில் காயப் போடுவதை "மீன் உணக்கல்" என்று குறிப்பிடுவர். நாவலில் மீனவர்களின் செழிப்பான பருவமாக "சாகரைப் பருவம்" உள்ளது. மீனவர் அப்பருவத்தில் வேண்டியவற்றை சேர்த்து வைத்துக் கொள்வர். சில நாட்களில் கடலில் மீன் கிடைக்காமல் இருக்கும்

நேரங்களில் ஒருநாள் பொழுதையும் கழிப்பதற்கு வழியில்லாமல் பட்டினியோடு இருக்கக்கூடிய நாட்களும் உள்ளன. மார்க்கெட்டில் மீனின் விலை சரிந்தாலும் பாதிப்பு ஏற்படும். மக்களின் வாழ்க்கை இந்நிலையில் காட்டப்பட்டுள்ளது.

## பழக்கவழக்கங்கள்

கடற்கரையில் மீனவர்கள் பல்வேறு நியதிகள் நம்பிக்கைகள் கொண்டு இருந்தனர். துறைக்கு நாதனாக விளங்குபவர் அரயன் மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எக்காரியங்களிலும் அரயனின் அனுமதியைப் பெற்று அனைத்தும் செய்தனர். துறை அரயனின் கோபத்துக்கு ஆளானால் மீனவக் குடும்பங்கள் எவ்வூரிலும் சென்று வாழ முடியாது. இல்லையெனில் வேறு மதங்களுக்கு மாறிவிடுவர். நாவலில் செம்பன் குஞ்சு அரயனிடம் கூறாமலே தோணி வலை வாங்கச் சென்றனர். ஊர்காரர்கள் எல்லோருமாக சேர்ந்து கொண்டு அரயனிடம் முறையிட்டனர். அவ்வாறு செய்தால் அதற்கு நிவரணமாக

“ஏழு இதழ் புகையிலையும் 15 ரூபாயும் கொடுக்க வேண்டும்” என்றனர் துறை அரயனை இவ்வாறாக மதித்தனர்”. செம்பன் குஞ்சுவின் மகள் கறுத்தம்மாவிற்கு திருமணம் ஏற்பாடு செய்திருந்தனர் துறை அரயனை முறையாக

“வெற்றிலை புகையிலை பணம் எல்லாம் காணிக்கை வைத்து அவரை அழைத்தான்” (Thakazhi Sivasankara Pillai, 1962).

இத்தகைய முறைகள் செய்தாலே முன்னின்று நடத்துவர். இவர்கள் ரொக்கப் பணம் கட்டி விடும் வழக்கம் உள்ளது. திருமணத்திற்கு முன்பாக மாப்பிள்ளையிடம் பணம் கேட்பர். இதற்கு ரொக்கப் பணம் கெட்டும் சடங்கு” என்பர். இப்பணத்தை நிர்ணயிப்பவர் அரயன் ஆவார். கறுத்தம்மாவிற்குத் திருமணம் நடக்கும் நேரத்தில் ரொக்கப் பணம் கட்டிவிட்ட தன்மையை அறியமுடியும்.

அம்மீனவச் சமூகத்தை சேர்ந்தவர்கள் தங்களது சமூகத்தைத் தவிர்த்துப் பிற மதக்காரர்களிடம் பெண் எடுப்பதும் இல்லை, பெண் கொடுக்கவும் மாட்டார்கள். அவ்வாறு நடந்தால் அதனை பெருந்தவறாகக் கருதுகின்றனர்.

## பெண்களின் நிலை

செம்படவர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் தங்களது கற்பு வாழ்க்கையையே பெரும் சொத்தாகக் கருதியிருந்தனர். இந்நாவலில் செம்பன்குஞ்சுவின் மகள் கறுத்தம்மாவின் மீது தவறான பழிச்சொல் ஏற்பட்டுவிடுகிறது. அவளது வாழ்நாள் முழுவதிலும் துன்பப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றாள்.

“அப்போ உன்னை நீர்க்குன்றத்துக் கடல்கரையிலே இருந்து எல்லோருமாச் சேந்து ஒருவழியா வெளியே அனுப்பி வச்சுட்டாங்கன்னு எல்லாரும் சொல்லுது நிசம்தான்னு சொல்லு” (Thakazhi Sivasankara Pillai, 1962).

திருமணத்திற்கும் பின்பு அவளது சிறுவயது செயல்பாட்டினை சொல்லி கணவனும் சந்தேகம்படும் அளவிற்கு ஆகிவிடுகிறது. இச்சமூகத்தில் ஆண், பெண் இருவரும் வேலைக்குச் செல்கின்றனர். கணவனின் பாரத்தை மனைவியும் ஏற்கும் விதமாக ஆண் மீன்பிடிக்கச் சென்றால் பெண் அவற்றை விற்று வருவது, மீதமுள்ள மீனை கருவாடாகப் பதப்படுத்துவது போன்ற வேலைகளை செய்கின்றனர். மரக்காத்தி ஒழுக்கக்கட்டுபாடுடன் இருந்தால்தான் கடலுக்குச் சென்ற கணவன் எவ்விதமான பாதிப்பு இல்லாமல் கரையை வந்தடைவார் என்பது நம்பிக்கையாக இருந்தது. கடலன்னையே தங்களது குலதெய்வமாக எண்ணி வழிபட்டனர்.

## முடிவுரை

மீனவர்களின் கொடிய வறுமை, அயரா உழைப்பு, எளிமை இதனை நேரில் கண்டாலன்றி நம்ப முடியாது. அவர்களது வாழ்க்கை ஒரு நீண்ட போராட்டமாகும். அவ்வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொண்டு வாழ்கின்றனர். இத்தகைய எளிய சமூகத்திலும் கட்டுப்பாடுகள், மரபுகள் எனப் பின்பற்றி வாழ்கின்றனர். அம்மக்கள் அவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றாற் போன்ற தொழிலை செய்து வாழ்கின்றனர். கிராமத்தின் தலைவனான அரயனின் அனுமதி, ஆசி இல்லையென்றால் எதுவும் நடைபெறாது. பெண்களுக்குக் கற்பு தூய்மையே சிறந்த சொத்தாகக் கருதப்படுகிறது. இவ்வாறாக "செம்மீன்" நாவலில் காட்டப்படும் மீனவர்களின் சமூகத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

## References


Chidambaranar Samy, (2008) Pattinapalai, Arivu publications, Chennai, India.

Subramanian, K.V., (2007) Natrinai Moolamum Uraiyum, Manivaasagar Pathippagam, Chennai, India.

Thakazhi Sivasankara Pillai, (1962) Chemmeen, Sahitya Akademi, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License